# SRIRAM COACHING CENTRE

# VAO – IMPORTANT NOTES



SRIRAM C

**நிறுவனர் வாழ்த்துரை ....**

நண்பர்களே ஸ்ரீராம் கோச்சிங் சென்டர் ஒவ்வொரு தேர்வுகளுக்கும் தேர்வு முன்னதாக பல இன்றியமையாத வினாக்களை தேர்ந்தெடுத்து அனைவருக்கும் பயன்படும் விதமாக வெளியிட்டு வருகிறது.. அவற்றிலிருந்து ஏராளமான வினாக்கள் கேட்கப்பட்டு வருகின்றன.. என்பதை அனைவரும் அறிவர்.. கடந்த வீஏஓ தேர்வின் இறுதியில் நாம் வெளியிட்ட வினாக்களில் 12 வினாக்கள் கிராம நிர்வாக அலுவலர் தேர்வில் வந்ததை தேர்வர்கள் வாயிலாக அறிந்து கொண்டோம்... அதே நல்லெண்ணத்தில் தேர்வர்களின் வேண்டுகோளின் படி இத்தொகுப்பு வெளியிடப்படுகிறது.. அனைவரும் பயன்படுத்தி கொள்ளவும்

வாழ்த்துக்களுடன்

பி. இராஜலிங்கம் **BA.,B.Ed.,D.T.Ed.,DCTT**

நிறுவனர் ஸ்ரீராம் கோச்சிங் சென்டர் - புளியங்குடி திருநெல்வேலி மாவட்டம்

**( இதன் முழுமையான தொகுப்பு வேண்டுமெனில் எங்களை தொடர்பு கொண்டு இ.மெயில் வாயிலாக பெற்றுக்கொள்ளலாம் )**

SRIRAM COACHING CENTRE

1. வருவாய் நிர்வாகம் - கிராம நிர்வாகம்

| வ.எண் | வினா | விடை |
|---|---|---|
| 1 | வருவாய் நிர்வாகம் என்ற பெயரானது வருவாய் நிர்வாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் தணிக்கும் துறை என பெயர்மாற்றம் செய்யப்பட்டது | அரசாணை எண் : 249 27.05.2003 |
| 2. | பகுதி நேர கிராம நிர்வாக அலுவலர்கள் ஒழிப்பு அமலுக்கு வந்தது | 14.11.1980 ( ஆளுநரால் ) |
| 3 | பகுதிநேர கிராம அலுவலர்கள் ஒழிப்பு சட்டம் | 1981 |
| 4 | தலையாரி வெட்டியான் நீர்க்கட்டி போன்ற பணியிடங்களை ஒழித்து கிராம உதவியாளர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு | அரசாணை எண் : 625 6.7.**1995** |
| 5 | கிராம உதவியாளர்கள் பணி விதிகள் வரையறுக்கப்பட்டது | ஆரசாணை எண் : 521 19.6.**1998** |
| 6 | கிராம நிர்வாக அலுவலர் ( VAO) பணிகள் விதிகள் வரையறுக்கப்பட்டது | அரசாணை எண் : 581 3.4.**1987** |
| 7 | கிராம நிர்வாக அலுவலர் ( VAO) நாட்குறிப்பு பராமரித்து வட்டாட்சியருக்கு அனுப்புதல் வேண்டும் | ஆரசாணை எண் : 212 29.4.**1999** |

2. கிராம நிர்வாக அலுவலரின் பணி விதிகள்

| வ.எண் | வினாக்கள் | விடைகள் |
|---|---|---|
| 1 | துமிழ்நாடு அரசின் அமைச்சுப்பணி விதி | விதி 38 பி |
| 2 | கிராம நிர்வாக அலுவலரின் இட ஒதுக்கீடு பொதுவிதி | விதி 22 |
| 3 | கிராம நிர்வாக அலுவரின் வயது | குறைந்தபடசம்- ஜுலை – 21<br>அதிகபட்சம் - ஜுலை – 30<br>BC, MBC, SC,SCA, ST - 40 |
| 4 | டெபாசிட் - பிணையத்தொகை<br>( டெபாசிட் தொகையை மாவட்ட ஆட்சியரின் பெயரில் அஞ்சலகத்தில் வைப்புத்தொகையா செலுத்த வேண்டும் | OC - 2000<br>BC, MBC – 1000<br>SC,SCA, ST – Nil- |
| 5 | கிராம நிர்வாக அலுவலர் தகுதிகாண் பருவம் | இரண்டு வருடம் |
| 6 | முதலில் நில அளவைப்பயிற்சி கொடுக்கப்படும் | ஒரு மாதம் ( 30 நாட்கள் ) |
| 7 | இரண்டாவது கிராம நிர்வாக பயிற்சி | 6 வாரம் ( 42 நாட்கள் ) |
| 8 | கிராம நிர்வாக அலுவலரை பதவி பிரமாணம் செய்து வைப்பவர் | கோட்டாட்சியர் - ஆர்.டி.ஓ |
| 9 | பணியிட மாறுதல் அதிகாரம் உள்ளவர்கள் | மாவட்டத்திற்குள் - கலெக்டர்<br>கோட்டத்திற்குள் - ஆர்.டி.ஓ<br>வெளிமாவட்டம் - வருவாய் நிர்வாக ஆணையர் |
| 10 | கிராம நிர்வாக அலுவலர்கள் தங்க வேண்டியது | துங்கள் பொறுப்பு கிராமத்தில் |

குறிப்பு : முதல்வர் எம்.ஜி. ஆர் காலத்தில் ஒரு குறிப்பிட்ட ஊருக்கு திட்ட அடிக்கல் நாட்டுவிழாவுக்கு சென்றபோது ஊர்மக்கள் அனைவரும் 'காத்திருங்கள் எங்கள் ஊர் ஜமின்தாரர் வரட்டும்' என கூறி காத்திருக்க வைத்தனர்... காலதாமதம் ஆகவே எம்.ஜி.ஆர் அவர்கள் கிராம ஜமின்தாரர் முறையை ஒழித்து அரசின் மூலமாக கிராம நிர்வாக அலுவலர் பணியிடங்களை முறையாக உருவாக்கி நடைமுறைப்படுத்தினார்கள் என்பது கூடுதல் தகவல்....

SRIRAM COACHING CENTRE

### 3. கிராம கணக்குள் மற்றும் கிராம கணக்குகளை பராமரித்தல்

| | | |
|---|---|---|
| 1 | புலன்கள் மற்றும் புலன்களின் ஏற்படும் மாறுதல் ஆகியவற்றை காண்பிக்கும் **நிலையான** பதிவேடு | அ – பதிவேடு |
| 2 | அ – பதிவேடு பிரதிகள் இருக்குமிடம் | முதல் பிரதி – வட்டாட்சியர் அலுவலகம்<br>இரண்டாம் பிரதி – கிராம நிர்வாக அலுவலகம் |
| 3 | அ – பதிவேற்றின் முதல் பகுதியில் இருப்பது | கிராம வரலாற்றுக் குறிப்பு |
| 4 | அ – பதிவேடு எத்தனை கலங்களில் பராமரிக்கப்பட்டு வருகின்றன | 11 கலங்களில் |
| 5 | அ – பதிவேட்டினை திருத்தும் அதிகாரம யாருக்கு உள்ளது | வட்டாட்சியருக்கு<br>( வீஏஓ-க்கு திருத்தும் அதிகாரம் இல்லை – தேவை ஏற்படின் சுருக்கொப்பம் இடலாம் ) |
| 6 | B பதிவேடு என்பது என்ன? | இனாம்களின் ( நன்கொடை ) நிலைப்புல பதிவேடு |
| 7 | இனாம் ஒழிப்பு சட்டம் | 1963 |
| 8 | தமிழ்நாடு ஜமின்தாரர் ஒழிப்பு சட்டம் | 1948 |
| 9 | இந்து சமய அறநிலைய சட்டம் | 1951 |
| 10 | C பதிவேடு என்பது | குத்தகைக்கு விடப்பட்ட நிலங்களை பற்றிய பதிவேடு |
| 11 | தற்போதைய நிலவரி வசூல் முறை<br>( 2010ல் திருத்தியமைக்கப்பட்டவாறு ) | ஆரசானை எண் : 544<br>நன்செய் - 1ஹெக் - 12ரூ<br>புன்செய் - 1 ஹெக் - 5 ரூ |

SRIRAM COACHING CENTRE

### 4. கிராமக் கணக்குகள்

| | | |
|---|---|---|
| 1 | கிராம கணக்கு எண் 1<br>( இதனை கட்டாயம் பிரதி மாதம் 25ம் தேதி வருவாய் ஆய்வாளருக்கு அனுப்ப வேண்டும் ) | கிராமத்தின் மாதவாரி சாகுபடி கணக்கு |
| 2 | கிராம கணக்கு எண் 2<br>ஏப்ரல் - மார்ச் மாதம் வரை பராமரிக்கப்பட வேண்டும் | கிராம அடங்கல் கணக்கு ... மிக முக்கியமான கணக்கு.. |
| 3 | கிராம கணக்கு எண் 3 | புலன்கள் மற்றும் புலன்களில் ( நிலம் ) ஏற்படும் மாறுதல்களை காண்பிக்கும் **வருடாந்திர** பதிவேடு |
| 4 | கிராம கணக்கு எண் 4 | இது அரசிறைக்கழிவை காண்பிப்பதாகும் |
| 5 | கிராம கணக்கு எண் 5<br>( நிலவரி தள்ளுபடி செய்ய அதிகாரம் படைத்தவர் - கோட்டாட்சியர்<br>வெள்ளம் அசாதரண நிலை ஏற்படும் போது முழு நிலவரியையும் தள்ளுபடி செய்பவர் - வருவாய் நிர்வாக ஆணையர் | வஜா கணக்கு ( நிலவரி தள்ளுபடி ) |
| 6 | கிராம கணக்கு எண் 6 | நிலங்களுக்கான தண்ணீர் |

| | | |
|---|---|---|
| | **குறிப்பு : தற்சமயம் இக்கணக்கு நீக்கப்பட்டுள்ளது** | தீர்வை விதிப்பினை காட்டும் பதிவேடு<br>7 |
| 7 | கிராம கணக்கு எண் 7<br>குறிப்பு : ஆக்கிரமிப்பு கணக்கு | புறம்போக்கு மற்றும் தீர்வை விதிக்கப்பட்ட மற்றும் தீர்வை விதிக்கப்படாத நிலங்களில் விளைவிக்கப்படும் புலப்பரப்பையும் வருவாய்களையும் காட்டும் பதிவேடு |
| 8 | கிராம கணக்கு எண் 8 மற்றும் 9<br>**குறிப்பு : தற்சமயம் இக்கணக்குள் நீக்கப்பட்டுள்ளது** | தண்ணீர் நீர்பாசன வருவாய் கணக்குகள் |
| 9 | கிராம கணக்கு எண் 10 | பட்டா சிட்ட தொடர்புடையது |
| | கிராம கணக்கு எண் 10 இல் 1<br>குறிப்பு : தற்போது இவை கணிணி மயமாக்கப்பட்டதால் இதனை கி.நி.அ கண்காணிக்க வேண்டியதில்லை.. | சிட்டா –<br>இது ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை புதிதாக எழுத வேண்டும் |
| | கிராம கணக்கு எண் 10 இல் 2<br>இசை 11 கலங்கல் கொண்ட படிவத்தில் பராமரிக்கப்படுகிறது<br>( நன்செய் - புன்செய் நில தீர்வை வீதம் 1 ஹெக்டேருக்கு மேலே கொடுத்துள்ளோம் ) | பட்டா வாரியாக தீர்வை வீதத்தை காட்டும் பதிவேடு ஆகும் |
| 10 | கிராம கணக்கு எண் 11<br>( குறிப்பு - இவை தற்போது கணிணி மயமாக்கப்பட்டதால் இக்கணக்கு நீக்கப்பட்டுள்ளது ) | ஒவ்வொரு பட்டாதாரருக்கு கொடுக்கப்பட வேண்டியப பட்டா படிவம் |
| 11 | கிராம கணக்கு எண் 12 | கிராமம் முழுமைக்கும் உள்ள நிலவரி நிர்ணய சுருக்கம் |
| 12 | கிராம கணக்கு எண் 13 - இதனை தண்டல் பதிவேடு எனவும் அழைக்கப்டுகிறது..<br>குறிப்பு - இக்கணக்கை பத்தாண்டு காலம் பராமரிக்கப்பட வேண்டும் | கிராமங்களில் நடைபெறும் தினசரி வருவாய் வசூலை காண்பிக்கும் பதிவேடு |
| 13 | கிராம கணக்கு எண் 14<br>குறிப்பு : ஒவ்வொரு பட்டாதாரருக்கும் ஒவ்வொரு பக்கம் ஒதுக்க வேண்டும் | ஒவ்வொரு பட்டாதாரரிடமிருந்தும் வசூலிக்கப்பட்ட தொகையை காண்பிக்க கூடி 13ம் கணக்கின் சுருக்கம் |
| 14 | கிராம கணக்கு எண் 15<br>**குறிப்பு : பிரதிமாதம் 30ம் தேதிக்குள் நிலவரியினை வங்கியில் செலுத்தாமல் கையிருப்பாக இருந்தால் அது தற்காலிக கையாடலாக கருதப்பட்டு தண்டனை அளிக்கப்டும்** | நிலவரியினை வங்கியில் செலுத்திய ரசீதினை பராமரிக்கும் பட்டியல் |
| 15 | கிராம கணக்கு எண் 16<br>குறிப்பு : **தற்சமயம் இந்த கணக்கு நீக்கப்பட்டு** கிராம கணக்கு எண் 18 உடன் இணைக்கப்பட்டது | நிலவரி பாக்கி இருந்தால் அதனை கேட்புத்தொகை செய்தல் |
| 16 | கிராம கணக்கு எண் 17<br>குறிப்பு : அபராதம் நூற்றுக்கு 5 சதவீதம் | நிலவரி தாமதமாக செலுத்தினால் அபராத தொகையினை காட்டும் பதிவேடு |
| 17 | கிராம கணக்கு எண் 18<br>குறிப்பு : பற்றுச்சீட்டு கையேட்டை வட்டாட்சியரிடம் காண்பித்து கையொப்பம் பெற வேண்டும் | பட்டாதாரர்களுக்கு செலுத்திய நிலவரிக்கு கொடுக்கப்படும் இரசீது... |

SRIRAM COACHING CENTRE

| | | |
|---|---|---|
| 18 | கிராம கணக்கு எண் 19 | பிறப்பு இறப்பு பற்றிய பதிவேடு |
| 19 | கிராம கணக்கு எண் 20<br>**குறிப்பு : பிரதிமாதம் 25ம் தேதிக்குள் வருவாய் ஆய்வாளரிடம் ஒப்படைக்க வேண்டும்** | மழைக் கணக்கு |
| 20 | கிராம கணக்கு எண் 21<br>**குறிப்பு : இதனை ஐந்தாண்டுகளுக்கு பராமரிக்க வேண்டும்** | கால்நடைக் கணக்கு |
| 21 | **கிராம கணக்கு எண் 22 23** | **நீக்கப்பட்டது** |
| 22 | கிராம கணக்கு எண் 24<br>குறிப்பு : ஜனவரி முதல் டிசம்பர் வரை பராமரிக்கப்பட வேண்டும் | கிராமத்தில் உற்பத்தி செய்யப்படும் கனிமவளம் பற்றிய பதிவேடாகும் |

**நில அளவைப் பதிவேடுகள்**

**இப்பதிவேடுகள் 5 வகைகளில் பராமரிக்கப்படுகிறது..**

1. கிராம வரைபடம்

கிராமத்தின் அமைப்பை குறிப்பிடும் **மொத்த** வரைபடமாகும்.. புலன் குடியிருப்பு மின்சாரக்கம்பி மயானம் கோவில் மசூதி ரோடு என அனைத்து விவரங்களை காட்டும் வரைபடமாகும்

2. டி. ஸ்கெட்ச்

**புறம்போக்கு நிலங்களை** கி.நி.அலுவலர் **அடையாளம் கண்டுகொள்ள** பயன்படும் வரைபடாகும்... புறம்போக்கு நிலங்களில் சர்வே கற்கள் ஊன்றப்பட்டிருக்கும்..

3. புல வரைபடம்

ஒவ்வொரு புலத்திற்கு ( நிலத்திற்கும் ) **தனியாக** வரைபடம் வரைந்து கிராமம் முழுமைக்கும் ஒரு புத்தகமாக தயாரிக்கப்படும். இதில் கி.நி.அலுவலர் திருத்தம் மேற்கொள்ள கூடாது. அரசின் ஒப்புதல் பெற்ற பின நில அளவையர் தான் திருத்துவர்

4. சர்வே கற்கள் பதிவேடு

டி. ஸ்கெட்ச் குறிக்க பயன்படும் கற்கள் பதிவேடாகும்... குறிப்பிட்ட நிலத்தில் உள்ள சர்வே கற்கள் காணாமல் போனால் அதற்கு நில உரிமையாளர் பொறுப்பாக கருதப்பட்டு நிலவரியின் போது தொகையினை வசூல் செய்து கொள்ளுவர்

5. கற்கள் டிப்போ பதிவேடு

சர்வே கற்கள் இருப்பு வைத்திருக்கும் இருப்பு பதிவேடு.. சர்வே டிப்போவிலிருந்து கற்கள் காணாமல் போனால் கி.நி.அலுவலரே முழுப்பொறுப்பு...

இதை தவிர பல பதிவேடுகள் பராமரிக்கப்பட்டாலும் அவற்றில் முக்கியமானது..

1. அந்நியர் வருகை குறித்த பதிவேடு
2. அகதிகள் பதிவேடு
3. சுதந்திர போராட்ட வீரர்கள் பதிவேடு
4. புராதான சின்னங்கள் பதிவேடு
5. **வறியர் வழக்கு பதிவேடு: வறியர் வழக்கு பதிவேடு என்பது.. ஒருவருக்கு அதிகமான சொத்து உரிமை இருந்து உறவினர்களால் மறுக்கப்பட்டு நீதிமன்றம் வாயிலாக தனக்கும் அச்சொத்தில் உரிமை உள்ளது என்பதை நிறுபிக்க கூட போதிய நிதி இல்லாதவர் ஆகும்...**

SRIRAM COACHING CENTRE

## பொது மக்கள் பார்வையிட அதிகாரம் உள்ள கணக்குகள்

1. கிராம கணக்கு எண் 1
2. கிராம கணக்கு எண் 2
3. கிராம கணக்கு எண் 6
4. கிராம கணக்கு எண் 7
5. கிராம கணக்கு எண் 10
6. கிராம கணக்கு எண் 13

## 5. நில அளவை – நிலவரி திட்டம் - தீர்வை விதிப்பு

ஒரு நிலம் 20 ஹெக்டேர் அல்லது அதற்கு மேற்பட்டோ இருந்தால் அதனை உட்பிரிவாக கருதாமல் அதற்கு பதிலாக தனி எல்லைகளாக கருதி.. தனி சர்வே எண் அளிக்கப்பட வேண்டும்

| வ.எண் | வினா | விடை |
|---|---|---|
| 1 | FMB என்பது | கிராம புல புத்தகம் |
| 2 | நில வரித்திட்டத்திட்டத்திற்காக அரசுக்கு அனுப்பி வைக்கபடும் அறிக்கை | சுற்றாய்வு அறிக்கை |
| 3 | நிலவரி திட்டத்திற்கு எத்தனை ஆண்டு தானிய விலையினை அடிப்படையாக எடுத்துக் கொள்வர் | 20 ஆண்டுகள் |
| 4 | நன்செய் நிலம் என்பது | நன்றாக விளையும் நிலம் |
| | புன்செய் நிலம் என்பது | புல்லாக இருக்கும் தரிசு நிலம் |
| | மானவாரி நிலம் என்பது | புஞ்சை நிலத்தை விட ஓரளவு மேம்பட்ட நிலம் |
| 5 | தீர்வை ஏற்பட்ட தரிசு என்பது | நிலவரி கட்டியிருந்தும் தனக்கென உரிமை கொண்டாட இயலாத தரிசு நிலம் |
| 6 | தீர்வை ஏற்பட்ட தரிசு நிலம் எவ்வாறு அழைக்கப்படுகிறது | அனாதீனம் |
| 7 | புறம்போக்கு நிலம் என்புத | சமுதாய பயன்பாட்டிற்காக உள்ள அரசின் நிலம் |
| 8 | புறம்போக்கு நிலம் எவ்வாறு அழைக்கப்படுகிறது | கல்லாங்குத்து மேடு |

SRIRAM COACHING CENTRE

( இதன் முழுத்தொகுப்பு தேவைப்படின் எங்களை தொடர்பு கொண்டு இ.மெயில் வாயிலாக பெற்றுக்கொள்ளலாம் )

## ஸ்ரீராம் கோச்சிங் சென்டர் - புளியங்குடி
## கிராம நிர்வாகம் - 1

01. வருவாய்த்துறை தற்போது எவ்வாறு பெயர்மாற்றம் பெற்றுள்ளது?

அ) வருவாய்த்துறை

ஆ) வருவாய் நிர்வாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் தணிக்கும் முறை

இ) பேரிடர் மேலாண்மை மற்றும் தணிக்கும் துறை

ஈ) வருவாய் நிர்வாகம் மற்றும் மேலாண்மை துறை

02. பகுதி நேர கிராம அலுவலர்கள் ஒழிப்பு அவசரச்சட்டம் தமிழ்நாட்டில் அமலுக்கு வந்த நாள்

அ) 14.11.1980 ஆ) 14.11.1981 இ) 14.12.1980 ஈ) 14.12.1981

03. கிராம நிர்வாக அலுவலர் அக்கிராமத்தில் பயிராய்வுகளை நடத்த வேண்டிய கால அளவு ?

அ) மாதம் ஒருமுறை ஆ) வாரம் ஒருமுறை

இ) 3 மாதம் ஒருமுறை ஈ) 2 மாதம் ஒரு முறை

04. இவற்றுள் எது கிராம நிர்வாக அலுவலரின் பணி அல்ல ?

அ) பிறப்பு இறப்பு பதிவேடுகளைப் பராமரித்தல்

ஆ) முதியோர் ஓய்வூதியப் பதிவேட்டைப் பராமரித்தல்

இ) இருப்புப்பாதை கண்கணிப்பிற்கு ஏற்பாடு செய்தல்

ஈ) கிராமத்தில் அசாதாரணமான மரணங்கள் குறித்து ஆய்வு செய்தல்

05. எது வி.ஏ.ஓ - வின் பணிகள் ?

1) கிராம ஊழியர்கள் சம்பளப்பட்டியல் தயாரித்தல்

2) கால்நடைப்பட்டியல் மற்றும் சாவடிகளின் கணக்குகளைப் பராமரித்தல்

3) புதையல்கள் பற்றி மேல் அதிகாரிகளுக்கு தகவல் கொடுத்தல்

4) முதியோர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவது

சரியான விடையைத் தேர்ந்தெடு

அ) 1 மற்றும் 4 ஆ) 1, 2 மற்றும் 3

இ) 2 மற்றும் 4 ஈ) 1, 3 மற்றும் 4

06. ‘அ’பதிவேட்டில் கலம் எண் 11 ல் அந்தந்த சர்வே எண்ணுக்கு எதிரில் பதியப்பட்டிருப்பது?

அ) பூமியில் உள்ள பூஸ்தி விவரங்கள் அடங்கிய குறிப்புகள்

ஆ) பட்டா எண் மற்றும் நில உடமையாளரின் பெயர்

இ) இருபோக நன்செய் எனில் மொத்த தீர்வை வீதம்

ஈ) இவற்றுள் எதுவுமில்லை

07. தமிழ்நாடு இனாம் ஒழிப்புச் சட்டம் கொண்டுவரப்பட்ட ஆண்டு

அ) 1962 ஆ) 1953 இ) 1963 ஈ) 1948

08. பகுதி நேர கிராம அலுவலர்கள் ஒழிப்பு அவசரச் சட்டத்தினை தமிழ்நாட்டில் பிரகடனப்படுத்தியவர் ?

அ) மாநில முதலமைச்சர் ஆ) ஆளுநர் இ) வருவாய் துறை அமைச்சர் ஈ) S.சோமசுந்தரம்

09. ‘அ’ பதிவேடு நடைமுறையில் எத்தனை காலங்களில் பராமரிக்கப்பட்டு வருகிறது ?

அ) 9 ஆ) 10 இ) 11 ஈ) 12

SRIRAM COACHING CENTRE

10. கிராம உதவியாளரின் பணிவிதிகள் உருவாக்கப்பட்ட ஆண்டு ?
அ) 1996 ஆ) 1997 இ) 1998 ஈ) 1999
11. தமிழ்நாட்டில் இனாம் ஒழிப்புச்சட்டம் பிறப்பிக்கப்பட்ட பிறகு பெரும்பாலான கிராமங்களில் இனாம் நிலங்கள் எவ்வகை நிலங்களாக மாற்றப்பட்டன ?
அ) ரயத்துவாரி ஆ) நத்தம் புறம்போக்கு இ) ஊராட்சி நிலங்கள் ஈ) அரசு புறம்போக்கு
12. 'அ' பதிவேட்டில் நிலவரித் திட்டத்திற்குப் பின்னர் ஒவ்வொரு பசலியிலும் ஏற்படும் மாற்றங்கள் குறித்து எவ்வளவு கால வரையறைக்குள் குறிப்பிட வேண்டும் ?
அ) 6 மாதம் ஒரு முறை ஆ) ஆண்டு தோறும்
இ) 2 ஆண்டு ஒரு முறை ஈ) 3 மாதம் ஒரு முறை
13. B – மெமோ அறிக்கை எனப்படுவது ?
அ) கிராம நத்தத்திற்கானது ஆ) குத்தகை நிலங்களுக்கானது
இ) அரசு புறம்போக்கு நிலங்களுக்கானது ஈ) நன்செய் நிலங்களுக்கானது
14. அடங்கல் கணக்கில், கலம் 19 ல், பயிராய்வு குறித்த முழு குறிப்புகளையும் குறிப்பிடுபவர் ?
அ) கோட்டாட்சியர் ஆ) வருவாய் ஆய்வாளர்
இ) வட்டாட்சியர் ஈ) கிராம நிர்வாக அலுவலர்
15. வட்ட 'G' அறிக்கை தயார் செய்யப் பயன்படுத்தப்படும் கிராம கணக்கு எது
அ) கணக்கு எண் 2 F ஆ) கணக்கு எண் 2 C
இ) கணக்கு எண் 4 ஈ) கணக்கு எண் 2 D
16. கிராம கணக்கு 2 C ஐ எத்தனை ஆண்டுகளுக்கு ஒரு முறை புதியதாக எழுதப்படவேண்டும் ?
அ) 3 வருடம் ஆ) 5 வருடம் இ) 2 வருடம் ஈ) 10 வருடம்
17. பருவக் கால பொய்ப்பினால், பயிர் சாகுபடி பாதிக்கும் பொழுது நிலவரி தள்ளபடியை அங்கீகரிப்பது யார்?
அ) வட்டாட்சியர் ஆ) கோட்டாட்சியர்
இ) மாவட்ட வருவாய் அலுவலர் ஈ) வருவாய் ஆணையர்
18. நிலவரி தள்ளுபடியோடு தொடர்புடைய கணக்கு எண்?
அ) கணக்கு எண் 6 ஆ) கணக்கு எண் 5 இ) கணக்கு எண் 4 ஈ) கணக்கு எண் 7
19. கிராம கணக்கு எண் 10 ல் 1, எத்தனை ஆண்டுகளுக்கு ஒரு முறை எழுதப்பட வேண்டும்
அ) 5 வருடம் ஆ) 15 வருடம் இ) 10 வருடம் ஈ) வருடம் ஒருமுறை
20. ஒவ்வொரு பட்டாதாரருக்கும் அளிக்கப்பட்ட பட்டாவடிவம் எனப்படுவது ?
அ) கணக்கு எண் 11 ஆ) கணக்கு எண் 3 இ) கணக்கு எண் 10(1) ஈ) கணக்கு எண் 10(2)
21. நிலவரி வசூல் பணியை வருவாய்த் துறையினர் தொடங்கும் மாதம் எது ?
அ) ஜனவரி ஆ) பிப்ரவரி இ) மார்ச் ஈ) ஏப்ரல்
22. கிராம கணக்கு எண் 18 ல் பற்றுச்சீட்டினை வழங்குபவர் யார் ?
அ) வட்டாட்சியர் ஆ) வருவாய் ஆய்வாளர் இ) கிராம நிர்வாக அலுவலர் ஈ) கோட்டாட்சியர்
23. கிராமத்தில் காணப்படும் அனைத்து கனிமங்களின் மற்றும் அதன் மூலம் பெறப்படும் வருவாய் ஆகிய விவரங்களைக் கணக்கிடும்?
அ) ஊரக வளர்ச்சித் துறை ஆ) புவியியல் துறை இ) சமூக நலத்துறை ஈ) புள்ளியியல் துறை
24. கிராம கணக்கு எண் 13 ஐ வட்டாச்சியர் அலுவலகத்தில் எத்தனை ஆண்டுகள் வைத்திருக்கவேண்டும்?
அ) 5 ஆண்டுகள் ஆ) 10 ஆண்டுகள் இ) 15 ஆண்டுகள் ஈ) 3 ஆண்டுகள்

SRIRAM COACHING CENTRE

25. பொருத்துக.

| | |
|---|---|
| A) மழைக் கணக்கு | 1) கிராமக் கணக்கு 6 |
| B) கால்நடைப்பதிவேடு | 2) கிராமக் கணக்கு 20 |
| C) தண்ணீர் தீர்வை | 3) கிராமக் கணக்கு 21 |
| D) தண்டல் ரொக்கப்பதிவேடு | 4) கிராமக் கணக்கு 13 |

சரியான விடையைத் தேர்ந்தெடு

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a) | 2 | 3 | 1 | 4 |
| b) | 3 | 2 | 4 | 1 |
| c) | 2 | 3 | 4 | 1 |
| d) | 3 | 1 | 2 | 4 |

26. தவறான கூற்றினைத் தேர்வு செய்க.

1. ஒவ்வொரு பட்டாதாரர் செலுத்த வேண்டிய நிலவரி தொகையை தாமதமாக செலுத்தினால் இதற்கு வட்டியாக அபராதம் வசூக்கப்படும்.
2. தாமதமான தொகைக்கு ஆண்டு ஒன்றுக்கு 10 % வீதம் வட்டியாக அபராதம் விதிக்கப்படும்.

அ) 1 மட்டும் ஆ) 1 மற்றும் 2 இ) 2 மட்டும் ஈ) எதுவுமில்லை, இரண்டும் சரி

SRIRAM COACHING CENTRE

27. சரியானவனவற்றை ஆய்க.

கூற்று (1): பகுதிநேர கிராம அலுவலர் பணியிடங்கள் 14.11.1980 முதல் தமிழ்நாடு பகுதிநேர கிராம அலுவலர் ஒழிப்புச்சட்டம் 3/81 – ன் படி ஒழிக்கப்பட்டது.

கூற்று (2): அரசாணை எண் 2747 வருவாய்த்துறை நாள் 12.12.1980 –ன் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையக் குழுமத்தின் வரையறைக்குள் கொண்டு வரப்பட்டது.

கூற்று (3): கிராம நிர்வாக அலுவலர் மாநில அரசால் நியமிக்கப்படுகிறார்.

அ) 1 மற்றும் 3 சரி ஆ) 2 மற்றும் 3 சரி இ) 1 மற்றும் 2 சரி ஈ) அனைத்தும் சரி

28. பின்வருவனவற்றுள் எது கிராம நிர்வாக அலுவலரின் பணி அல்ல ?

அ) சிட்டா மற்றும் அடங்கல்களின் நகல்கள் வழங்குதல்.
ஆ) மாவட்டத்தின் சட்டம் ஒழுங்கை பராமரித்தல்
இ) பிறப்பு, இறப்புப் பதிவேடுகளைப் பரமரித்தல்
ஈ) இருப்புப் பாதை கண்காணிப்பிற்கு ஏற்பாடு செய்தல்.

29. கோயில்களுக்கு தானமாக அளிக்கப்படும் நிலம்

அ) சுவாதீனம் ஆ) தேவதானம் இ) அனுபோகம் ஈ) தேவதாசி இனாம்

30. பசலி ஆண்டு ( Fasli Year) என்பது

அ) ஏப்ரல் முதல் மார்ச் வரை ஆ) ஜீன் முதல் மே வரை
இ) ஜீலை முதல் ஜீன் வரை ஈ) ஜனவரி முதல் டிசம்பர் வரை

31. ஜமாபந்தி ( Jamabandhi ) என்பது.

அ) சாதி சமய வேறுபாடின்றி கிராமத்தில் உள்ள அனைவரும் அரசு விழா நாட்களில் ஒன்றாக உண்ண கிராம

நிர்வாக அலுவலர் ஏற்பாடு செய்வது

ஆ) வருவாய் நிர்வாகம்

இ) குறிப்பிட்ட ஒரு நிலத்தை அல்லது நிலத்தின் ஒரு பகுதியை பயன்படுத்தும் உரிமையை ஒரு குறிப்பிட்டக் காலத்திற்கு மற்றொரு நபருக்கு அளிப்பது.

ஈ) நிலத்தை ஒருவருக்கு விற்பனை செய்வது.

32. ஒரு வருவாய் கிராமத்தில் ஏரி அமைந்திருந்து ஒன்றுக்கு மேற்பட்ட கிராமங்களில் உள்ள நிலங்களை ஆயக்கட்டு நிலங்களாகக் கொண்ட ஏரி

அ). இசா ஏரி ஆ) சிறிய ஏரி இ) பழைய ஏரி ஈ) புதிய ஏரி

33. குடி மராமத்துச் சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு

அ) 1858 ஆ) 1956 இ) 1860 ஈ) 1905

34. ஒரு பருவத்திற்கு மேற்பூமியில் அறுவடை செய்யாமல் உள்ள சாகுபடி செய்யப்பட்ட பயிர்கள்

அ) நன்செய் பயிர்கள் ஆ) தண்ணீர் தீர்வை பயிர்கள் இ) டபசல் பயிர்கள் ஈ) தீர்வை ஜாஸ்தி

35. நதிநீர்ப் பாசன வகைகள், ஏரிகள், கிணறுகள் தருகின்ற கிராமக்கணக்கு எண் ------------

அ) 2 க்கு d உள்ளடக்கம் ஆ) 2E இ) 2F ஈ) 2க்கும் c உள்ளடக்கம்

36. ஒரு பாசன ஆதாரத்திலிருந்து சாகுபடிக்கு நீர் பெறுவதற்காக பதிவு செய்யப்பட்ட நிலங்கள் ---------

அ) ஏரி புறம்போக்கு ஆ) ஆயக்கட்டு நிலங்கள் இ) இவை ஏதுமில்லை ஈ) நத்தம் புறம்போக்கு

37. நில ஒப்படை விதிகளின்படி நகர்புறத்தில் உள்ளவர்களுக்கு குடும்ப ஆண்டு வருமானம்

அ) ரூ. 16,000 ஆ) 30,000 இ) 18,000 ஈ) 60,000

38. நகரங்களில் வீட்டுமனை ஒப்படை செய்வதற்கு அதிகாரம் பெற்றவர் ------------

அ) கிராம நிர்வாக அலுவலர் ஆ) வட்டாட்சியர்

இ) வருவாய் ஆய்வாளர் ஈ) மாவட்ட ஆட்சியர்

39. வீட்டுமனை ஒப்படை பெற்றவர்கள் குறைந்தது எத்தனை மாதத்திற்குள் வீடு கட்டவேண்டும் ?

அ) 14 மாதம் ஆ) 12 மாதம் இ) 16 மாதம் ஈ) 36 மாதம்

40. மாநகராட்சி எல்லைக்குள் வீட்டுமனை ஒப்படைத்திட்டத்தில் எவ்வளவு நிலம் வழங்கப்படுகிறது?

அ) 1 ½ செண்டு ஆ) மூன்று செண்டு இ) ஒரு செண்டு ஈ) இரண்டு செண்டு

41. வீட்டுமனை ஒப்படைத்திட்டத்தில் வீட்டுமனை இவரின் பெயரில் மட்டுமே வழங்கப்படுகிறது ?

அ) ஆண் வாரிசு ஆ) பெண் உறுப்பினர் இ) குடும்பத்தலைவர் ஈ) ஆண் பட்டதாரி

42. பொருத்துக.

| | |
|---|---|
| A. தேதாயம் | 1. வேதியர்களுக்கும் மற்றும் இதர மதத்திற்கும் சொந்த உபயோகத்திற்கு வழங்கப்பட்ட இனாம்கள் |
| B. தர்மாதாயம் | 2. வருவாய் தரக்கூடிய பாசன ஆதாரங்களைப் பாதுகாக்க வழங்கப்பட்ட இனாம்கள் |
| C,. தசபந்தம் | 3. சத்திரம், தண்ணீர்ப் பந்தல் மற்றும் கல்வி ஸ்தாபனங்களுக்குக் கொடுக்கப்பட்ட இனாம்கள் |
| D. பிரம்மதாயம் | 4. மத ஸ்தாபனங்களுக்கும் அதற்கு ஊழியம் செய்வதற்கும் வழங்கப்பட்ட இனாம்கள் |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a) | 4 | 3 | 2 | 1 |

SRIRAM COACHING CENTRE

| | | | | |
|---|---|---|---|---|
| b) | 4 | 3 | 1 | 2 |
| c) | 4 | 2 | 1 | 3 |
| d) | 1 | 3 | 2 | 4 |

43. எவ்வருடச் சட்டத்தினால் ஜமீன்கள் ஒழிக்கப்பட்டது ?

அ) 1950 ஆ) 1946 இ) 1948 ஈ) 1949

44. ஜமாபந்தி அலுவலர் சரிபார்க்கும் கணக்குகள் -------------

அ) 1 முதல் 12 ஆ) 1 முதல் 24 இ) 1 முதல் 30 ஈ) இவை ஏதுமில்லை

45. ஜமாபந்தி எப்பொழுது நடத்தப்படுகிறது ?

அ) மே முதல் ஜீலை வரை ஆ) செப்டம்பர் முதல் டிசம்பர் வரை

இ) ஜீலை முதல் செப்டம்பர் வரை ஈ) ஏப்ரல் முதல் ஜீன் வரை

46. கிராமத்தில் ஜமாபந்தியில் வருடாந்திர நிலவரி கேட்பானை முடிவு செய்யும் அலுவலர் பெயர் ?

அ) வருவாய் தீர்வாய அலுவலர் ஆ) கோட்டாட்சியர்

இ) மாவட்ட ஆட்சியர் ஈ) வட்டாட்சியர்

47. பிறப்பு மற்றும் இறப்பு சட்டங்கள் எந்த ஆண்டு கட்டாயமாக்கப்பட்டது?

அ) 2000 ஆ) 1998 இ) 1996 ஈ) 2005

48. பொருத்துக.

A. படிவம் - 5 — 1. பிறப்புப் பதிவேடு (Birth Register)

B. படிவம் - 6 — 2. பிறப்பு சான்று (Birth Certificate)

C. படிவம் – 7 — 3. இறப்புப் பதிவேடு (Death Register)

D. படிவம் - 8 — 4. இறப்புச் சான்று (Death Certificate)

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 2 | 4 | 3 | 1 |
| b. | 2 | 4 | 1 | 3 |
| c. | 2 | 3 | 2 | 4 |
| d. | 1 | 4 | 3 | 2 |

SRIRAM COACHING CENTRE

49. 'கர்ப்பகால அளவு' (விதி – 3) (பிரிவு-2) –ன் படி எனக் குறிக்கப்பட்டுள்ளது.

அ) 30 வாரங்கள் ஆ) 28 வாரங்கள் இ) 32 வாரங்கள் ஈ) 26 வாரங்கள்

50. குடிமைச்சட்டம் 1955 – ன் படி (Citizenship Act 1995) பிறப்பு இறப்புகளை பதிவு செய்ய வேண்டும் என எந்த பிரிவு கூறுகிறது?

அ) பிரிவு 21 ஆ) பிரிவு 24 இ) பிரிவு 20 ஈ) பிரிவு 25

51. பிறப்பு இறப்பு நிகழ்வு நடந்த --------------- நாட்களுக்குள் பதிவு செய்ய வேண்டும்.

அ) 21 ஆ) 30 இ) 15 ஈ) 45

52. தமிழ்நாடு வருவாய் வசூல் சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு

அ) 1864 ஆ) 1866 இ) 1863 ஈ) 1896

53. கிராம நிர்வாக அலுவலர் வசூலிக்கும் இதர வரிகளில் இடம்பெறாதது எது?

அ) அபிவிருத்தி வரி ஆ) நகர்ப்புற நிலவரி இ) வாரகம் ஈ) வருமான வரி

54. அடங்கலை குறிக்கும் கிராமக்கணக்கு எண்

அ) 4 ஆ) 2 இ) 6 ஈ) 7

55. பின்வருவனவற்றை ஆய்க.

கூற்று (A): சட்டப்பிரிவு 24 – ன் படி பாக்கிதாரருக்கு அசையும் சொத்துக்கள் இல்லாவிடில் அவருடைய அசையா சொத்துக்களை ஜப்தி செய்யலாம்.

காரணம் (R): 30 – ன் படி படிவம் 10 – ல் ஏல விற்பனையில் நிலத்தை ஏலம் எடுத்தவர் வாங்கியது குறித்து அறிவிப்பு மாவட்ட அரசிதழில் வெளியிடப்படும்.

அ) A & R இரண்டும் சரி R ஆனது A விற்கு சரியான விளக்கம்.

ஆ) A & R இரண்டும் சரி R ஆனது A விற்கு சரியான விளக்கமல்ல.

இ) A சரி R தவறு ஈ) A தவறு R சரி

56. கிராம நிர்வாக அலுவலர் ஜனவரி மாதத்திலிருந்து எத்தனை தவணைகளாக நிலவரி வசூல் செய்ய வேண்டும்?

அ) 2 ஆ) 3 இ) 4 ஈ) 5

57. இலவச நில ஒப்படை எந்த அரசாணை மூலம் வழங்கப்படுகிறது?

அ) அரசாணை எண் 423 ஆ)அரசாணை எண் 316 இ) அரசாணை எண் 287 ஈ) அரசாணை எண் 327

58. நில ஒப்படையின் கீழ்பெறப்பட்ட நிலத்தில் குறைந்தது எத்தனை மரங்கள் நடவேண்டும்?

அ) 20 ஆ) 25 இ) 15 ஈ) 10

59. நில ஒப்படை விதிகளின்படி கிராமப்புறத்தில் உள்ளவர்களுக்கு ஆண்டு வருமானம் --------

அ) ரூ. 30,000 ஆ) ரூ. 12,000 இ) ரூ. 18,000 ஈ) ரூ. 60,000

60. நில ஒப்படை தகுதி உடையவர் --------------

அ) ஆதிதிராவிடர் ஆ) பழங்குடியினர் இ) இராணுவ வீரர் ஈ) அனைவரும்

61. விவசாய நில ஒப்படை வருவாய் நிர்வாக ஆணை

அ) விதி 15 ஆ) விதி 16 இ) விதி 17 ஈ) விதி 18

62. நில வகைகளின் எண்ணிக்கை ---------------

அ) 4 ஆ) 3 இ) 5 ஈ) 6

63. அரசுக்கு சொந்தமான இடம் ------------

அ) நன்செய் ஆ) புன்செய் இ) மானாவாரி ஈ) புறம்போக்கு

64. நில ஆக்ரமணங்களை அகற்ற நில ஆக்ரமணச்சட்டம் -------------- ன் படி நடவடிக்கை எடுக்கலாம்

அ) 1906 ஆ) 1903 இ) 1905 ஈ) 1907

65. தமிழ்நாடு நில சீர்த்திருத்தச்சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு

அ) 1963 ஆ) 1961 இ) 1965 ஈ) 1967

66. பின்வருவனவற்றை ஆய்க.

தமிழ்நாடு நில உச்சவரம்பு சட்டத்தின்படி

I சட்டப்பிரிவு 37A-பொது நம்பகங்கள் கல்வி மற்றும் மருத்துவமனை நோக்கங்களுக்குக்காக மட்டுமே 01.03.1972 தேதிக்குப் பிறகும் நிலங்கள் வாங்கலாம். ஆனால் அதற்கு அரசிடம் அனுமதி பெறவேண்டும்.

II சட்டப்பிரிவு 37B – தொழில் மற்றும் வணிக நோக்கங்களுக்காக தொழில் நிறுவனங்கள் உச்ச வரம்புக்குமேல் விவசாய நிலங்கள் வாங்கும் பட்சத்தில் அரசின் அனுமதிபெறவேண்டும்.

அ) I சரி ஆ) II சரி இ) இரண்டும் தவறு ஈ) இரண்டும் சரி

67. கிராம நிர்வாக அலுவலரால் வழங்கப்படும் சான்றுகளின் எண்ணிக்கை

அ) 14 ஆ) 12 இ) 15 ஈ) 18

68. ஒரு நபர் குடும்பத்தைவிட்டு காணாமல் போன எத்தனை ஆண்டுகள் கழித்து இறந்துவிட்டதாக கருதப்படுவார்?

SRIRAM COACHING CENTRE

அ) எட்டு ஆ) ஏழு இ) ஒன்பது ஈ) ஐந்து

69. ஆதிதிராவிடர் மற்றும் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் சான்று (S.C) வழங்கும் அதிகாரம் பெற்றவர்

அ) வட்டாட்சியர் ஆ) கிராம நிர்வாக அலுவலர் இ) துணை வட்டாட்சியர் ஈ) மாவட்ட ஆட்சியர்

70. திருமணமான ஒரு பெண் எத்தனை ஆண்டுகளுக்கு மேல் தனித்து வாழ்ந்தால் கணவனால் கைவிடப்பட்டவராக கருதப்படுவார்?

அ) 5 ஆண்டுகள் ஆ) 6 ஆண்டுகள் இ) 7 ஆண்டுகள் ஈ) 3 ஆண்டுகள்

71. ஆதரவற்ற விதவைச் சான்று யாரால் வழங்கப்படுகிறது?

அ) வட்டாட்சியர் ஆ) மாவட்ட ஆட்சியர்

இ) கோட்டாட்சியர் ஈ) கிராம நிர்வாக அலுவலர்

72. வருவாய் நிர்வாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் தணிக்கும் துறை என 2003 -ல் எந்த ஆணை எண்படி மாற்றப்பட்டது?

அ) 248 ஆ) 258 இ) 249 ஈ) 250

73. குழந்தையின் பெயர் பதிவு எத்தனை மாதத்திற்குள் கிராம நிர்வாக அலுவலரிடம் பதிவு செய்யவேண்டும்?

அ) 10 ஆ) 11 இ) 12 ஈ) 13

74. அயல்நாட்டில் ‘பிறந்து’ பிறப்புப் பதியப்படாமல் இந்தியாவில் வந்து நிலையாக தங்கியிருக்கும்போது எத்தனை நாள்களுக்குள் பிறப்பு பதிவு செய்யப்பட வேண்டும்?

அ) 30 ஆ) 40 இ) 50 ஈ) 60

75. நில ஒப்படை பெற்றவர்கள் எத்தனை ஆண்டுக்குள் பயிர் சாகுபடி செய்திட வேண்டும்?

அ) 2 ஆ) 3 இ) 4 ஈ) 5

76. பூமிதான இயக்கம் ஆச்சர்ய வினோபா பாவே அவர்களால் எந்த ஆண்டு துவக்கப்பட்டது?

அ) 1950 ஆ) 1956 இ) 1951 ஈ) 1960

77. தமிழ்நாடு பூமிதான யக்ஞச் சட்டம் எந்த ஆண்டு இயற்றப்பட்டது?

அ) 1952 ஆ) 1958 இ) 1960 ஈ) 1962

78. நில ஒப்படை பெற்றவர்கள் எத்தனை ஆண்டுகளுக்கு மேல் விற்பனை செய்யலாம்?

அ) 5 ஆண்டுகள் ஆ) 8 ஆண்டுகள் இ) 10 ஆண்டுகள் ஈ) 11 ஆண்டுகள்

79. ஆதிதிராவிடர் நலத்துறையில் வீட்டுமனைப்பட்டா வழங்கிய உடன் எத்தனை மாதத்திற்குள் வீடு கட்டவேண்டும்?

அ) 3 மாதம் ஆ) 5 மாதம் இ) 4 மாதம் ஈ) 6 மாதம்

80. நிலத்தின் உண்மையான மதிப்பினை நில எடுப்பு அலுவலருக்கு தெரிவிக்கவும் கிராமக் கணக்குகள் நகல் வழங்குவதும் யாருடைய கடமையாகும்.?

அ) வட்டாட்சியர் ஆ)கிராம நிர்வாக அலுவலர் இ) கோட்டாட்சியர் ஈ) வருவாய் அலுவலர்


---

**தேர்வில் வெற்றி பெற வாழ்த்துக்கள்**

**நிறுவனர் & விரிவுரையாளர்கள்**

**ஸ்ரீராம் கோச்சிங் சென்டர் - புளியங்குடி**

SRIRAM COACHING CENTRE



OMR- ANSWER SHEET

Exam Roll No

NAME :
Father Name:
Qualification:
ADDRESS:

CELL:
PIN :

Marks:
Note:

TET/TRB/TNPSC/VAO/BANK

Addmission Contact:
86789 13626
95430 79848

All the Best
Your Exam

100 % வெற்றியே
எங்களின் இலக்கு

அரசு அரியணையில்
அமர்த்தும் ஒரே நிறுவனம்

Co-Ordinator Supervisor

எங்களுக்கு வேறு எங்கும் கிளைகள் இல்லை

ஸ்ரீ ராம் கோச்சிங் சென்டர்
T.N.புதுக்குடி - புளியங்குடி, செல்: 86789 13626

**விடைகள் : கிராம நிர்வாக அலுவலரின் நடைமுறைகளும் பணிகளும்**

| | | | |
|---|---|---|---|
| 27. இ | 41. ஆ | 55. ஈ | 69. அ |
| 28. ஆ | 42. ஆ | 56. இ | 70. அ |
| 29. ஆ | 43. இ | 57. இ | 71. இ |
| 30. இ | 44. ஆ | 58. ஈ | 72. இ |
| 31. ஆ | 45. ஈ | 59. அ | 73. இ |
| 32. அ | 46. ஆ | 60. ஈ | 74. ஈ |
| 33. அ | 47. ஆ | 61. அ | 75. ஆ) 3 ஆண்டுகள் |
| 34. இ | 48. ஆ | 62. அ | 76. இ) 1951 |
| 35. அ | 49. ஆ | 63. ஈ | 77. ஆ) 1958 |
| 36. ஆ | 50. இ | 64. இ | 78. இ) 10 ஆண்டுகள் |
| 37. ஈ | 51. அ | 65. ஆ | 79. ஈ) 6 மாதம் |
| 38. ஈ | 52. அ | 66. இ | 80. ஆ) கிராம நிர்வாக அலுவலர் |
| 39. ஆ | 53. ஈ | 67. ஆ | |
| 40. இ | 54. ஆ | 68. ஆ | |

**PG – TRB** – TAMIL, ENGLISH, HISTORY, ECONOMICS AND OTHER

**TET – PAPER 1, PAPER 2 ALL**

**TNPSC – TAMIL, HISTORY, POLITY, MATHS, GK AND ALL**

**RAILWAY, CURRENT AFFAIRS**

**NOTE : CASH ON DELIVERY AVAILABLE ( COD )**

SRIRAM COACHING CENTRE

